www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - 2025

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | |

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - I (மதிப்பெண்கள்:8)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8 x 1 = 8

1. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் _______ க் கண்டு அஞ்சமாட்டார்கள்.
   அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை
2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் _______
   அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்
3. அயோத்திதாசர் நடத்திய இதழ் _______
   அ) ஒரு பைசாத்தமிழன் ஆ) காலணாத்தமிழன்
   இ) அரைப்பைசாத்தமிழன் ஈ) அரையணாத்தமிழன்
4. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது _______
   அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை
5. அடுத்தவர் வாழ்வைக் கண்டு _______ கொள்ளக்கூடாது.
   அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்
6. திருமூலர் இயற்றிய நூல்
   அ) திருக்குறள் ஆ) திருமந்திரம் இ) திருவாய்மொழி ஈ) தேவாரம்
7. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______
   அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும் இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்
8. 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _______
   அ) இன்பம் + துன்பு ஆ) இன்பம் + துன்பம்
   இ) இன்ப + அன்பம் ஈ) இன்ப + அன்பு

Padasalai

### பகுதி - II (மதிப்பெண்கள்:12)

#### பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: (13 கட்டாய வினா) 3 x 2 = 6

9. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?
10. தோல்வி எப்போது தூண்டு கோலாகும்?
11. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
12. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
13. 'தொடர்பு' என முடியும் திருக்குறளை எழுதுக.

#### பிரிவு - 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 3 x 2 = 6

14. சந்திப்பிழை என்றால் என்ன?
15. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
16. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக: முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.
17. சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.
   அ) தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை _____
   ஆ) உங்களோடு வருவோர் நாம் _______
18. கலைச்சொல் எழுதுக. அ) Rational ஆ) Saint

CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - III (மதிப்பெண்கள்:12)

பிரிவு - 1 2x3=6

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: (21 கட்டாய வினா)

19. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.

20. மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

21. அ) "ஓடிவந்து" - எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) "ஒன்றே குலமும்" - எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 2

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2x3=6

22. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

23. இருவகை அசைகளையும் விளக்குக.

24. பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.

1. சுட்டுத் திரிபு 2. திசைப் பெயர்கள் 3. பெயரெச்சம் 4. உவமைத்தொகை

5. நான்காம் வேற்றுமை விரி 6. இரண்டாம் வேற்றுமை தொகை

பகுதி - IV (மதிப்பெண்கள்:10)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 2x5=10

25. அ) குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

(அல்லது)

ஆ) மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?

26. அ) வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி பத்து சொற்களை உருவாக்குக.




(அல்லது)

ஆ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

பகுதி - V (மதிப்பெண்கள்:8)

விரிவான விடையளிக்க: 1x8=8

27. அ) வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

******

CamScanner

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com